தலித் இலக்கியம் என்பது தலித்துகளைப் பற்றி தலித் எழுத்தாளர்களால் தலித் உணர்வோடு எழுதப்படுவதே தலித் இலக்கியமாகும். தலித் மக்களின் வேதனை, வலி, இடையூறு, அடிமைத்தனம், அனுபவம், இழிநிலை, ஏளனம், வறுமை ஆகியவற்றை கலை நுட்பத்துடன் வெளிப்படுத்தும் அழகியலே தலித் இலக்கியமாகும். இந்த இலக்கியம் தலித்துகளின் துன்ப துயரங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகும். தலித் இலக்கியங்களின் மூல எரிபொருளே அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகள்தான்.

-சரண்குமார் லிம்பாலே

ரகுதேவன் தலித் இலக்கியத்தின் இரண்டாம் தலைமுறை. வீரியமிக்க படைப்பாளி. தலித்தியத்தை உள்வாங்கி செரித்து அதன்வழி தன்னுடைய படைப்புக்களை முன்வைக்கிறார். அத்துடன் தனது பக்கத்து நியாயத்தைத் தொடர்ந்து பதிவுசெய்து வருகிறார். கவிதையாகவும், கட்டுரையாகவும், சிறுகதையாகவும், புதினமாகவும், உரையாடலாகவும் அவருடைய செயல்பாடுகள் விரிந்துகிடக்கின்றன. 'வெந்தீ' ரகுதேவனின் ஆறாவது நூல் இரண்டாவது புதினம். 'மூணாங்கொடி' என்ற முதல் புதினம் தமிழக அரசின் பரிசு பெற்ற நூலாகும்.

-அரச.முருகுபாண்டியன்



மௌவல் வெளியீடு

MC-073 | ₹140

9 788193 829622

வெந்தீ ரகுதேவன்

# வெந்தீ

ரகுதேவன்



வெந்தீ Vendhee

© ரகுதேவன் © Ragudevan

முதல் பதிப்பு: 2018 First Edition: 2018

பக்கங்கள்: 152 Pages: 152

நூல் வடிவமைப்பு: கேபிடல் இம்ப்ரசன் Design by: Capital Impression

அச்சாக்கம்: கேபிடல் இம்ப்ரசன் சென்னை 600 014. Printed by: Capital Impression, Chennai 600 014.

விலை : ₹ 140

மேன்மை வெளியீடு

5/2, பெர்தோ தெரு, இராயப்பேட்டை,
வி.எம். தெரு, (கில் ஆதர்ஷ் பள்ளி அருகில்),
சென்னை 600 014.
தொலைபேசி : 044 2847 2058


## பதிப்புரை

செவ்வாய் கிரகத்தில் மனிதனைக் குடியேற்ற அமெரிக்க வல்லரசு ஆயத்தமாகிக் கொண்டு வரும் இந்த 20ம் நூற்றாண்டிலும், மனித மலத்தை மனிதனே அள்ளும் அவலம் இன்னும் ஒழிந்த பாடில்லை, மரம் செடி, கொடிகளின் பட்டைகளை உடலில் சுற்றிக் கொண்டு, சிக்கி முக்கிக் கற்களால் நெருப்பு மூட்டி, இறைச்சியை வேகவைத்து சாப்பிட்ட மனிதன், இன்று வான்வெளி ஆராயச்சியிலும், கணிணி இயலிலும் பிரமிக்கத் தக்க வகையில் முன்னேற்றம் கண்டிருந்தாலும், சிற்சில அவலங்கள் ஆணிவேராய், இன்னும் சமூகத்தின் நிலப் பரப்பைப் பற்றிக் கொண்டு தானிருக்கின்றன.

கொங்கு வட்டார வழக்காற்றுச் சொற்களுடன், ஒடுக்கப்பட்ட மக்களின் வலிகள், சமூகத்தில் அவர்கள், நாள்தோறும் மேட்டுக் குடியினரால் அடையும் அவமானங்கள் என்று அனைத்தையும் நூலாசிரியர் ரகுதேவன் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பது தலித் இலக்கிய வரலாற்றின் ஆகச் சிறந்த அறைகூவலாக புதினம் முழுவதும் ஒலிக்கின்றது.

கழிப்பறையை சுத்தம் செய்ய.... தண்ணீர்... தண்ணீர்..." என்று கெஞ்சும் பூவாயியை "பத்து மாசம் சொமந்து பெத்தவ மாதிரி அம்மான்னு கூப்புடுறே... என்று வூட்டுக்காரி குணசுந்தரி சிடுக் சிடுக்குன்னு எரிஞ்சு உழுந்தா" என்ற வரிகளில் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தின் மீது, இந்த சமூகம் கொண்டிருக்கும் காழ்ப்புணர்ச்சி அழுத்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தாழ்ந்த சாதி என்பதனால் அவர்களின் மன உணர்வுகளைக் கொல்லும் அடாவடி வார்த்தைகளைப் பேசுவதும் "வன்கொடுமை" தானோ என்ற கேள்வி மனதில் எழுகிறது.

1989ஆம் வருடம் எஸ்.சி, எஸ்.டி வன்கொடுமை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி வன்கொடுமை நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டால் ஜாமீனில் வெளிவர முடியாது. அதுமட்டுமின்றி பாதிக்கப்பட்டவருக்கு, அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். ஆனால் அந்தச் சட்டம், போதிய அளவிற்குப் பயன்படாமல் இருக்கிறது. "சட்டம் ஒரு இருட்டறை"